*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

UGC Approved by Transparent Peer Review

**Vol. 12 No. 03 (2026): August 2026, p99-109** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper*

# வள்ளலாரின் உரைநடை நூல்களில் படைப்பிலக்கிய ஆளுமை

## Creative Literary Personality in the Prose Works of Vallalar

**திரு. இரா. முத்துராஜா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு), மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,
பசுமலை, மதுரை – 625 004.

**Mr. R. Muthuraja*,**
*Assistant Professor, Department of Tamil (Self-Financing Wing),*
*Mannar Thirumalai Naicker College, Pasumalai, Madurai – 625 004, Tamil Nadu, India.*
*Email: muthuraja16488@gmail.com Tel: +919943772722*

**முனைவர் சு. உமாமகேஸ்வரி,**
ஆய்வு நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை – 09.

**Dr. S. Umamaheswari,**
*Research Supervisor, Assistant Professor, Department of Tamil, Thiagarajar College,*
*Madurai – 625 009, Tamil Nadu, India.*

*Article history*
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 29-07-2026

*Corresponding Author Email:
muthuraja16488@gmail.com
Tel: *919943772722*

**Abstract:** Arutprakasa Vallalar, who propagated the philosophy of Samarasa Suddha Sanmarga to the world, occupies a distinguished place in the history of Tamil literature. He was not only an eminent poet but also an accomplished prose writer. Vallalar's prose works transcend the boundaries of religious expository literature and stand as remarkable literary creations that eloquently articulate the ideals of humanitarianism, compassion for all living beings, equality, moral discipline, and social reform. This paper examines the distinctive features of his prose, including its linguistic style, conceptual framework, narrative technique, social responsibility, spiritual humanism, the philosophy of Jeevakarunyam (compassion towards all life), and its literary devices. Furthermore, the study demonstrates that Vallalar's prose continues to offer meaningful guidance in addressing contemporary issues such as humanitarian values, religious harmony, environmental consciousness, and universal brotherhood, thereby affirming its enduring relevance.

**Keywords:** *Vallalar, Prose, Creative Literature, Jeevakarunyam, Manumurai Kanda Vasagam, Humanitarianism, Sanmarga, Prose Style, Religious Reform.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**DOI: https://doi.org/10.63300/tm12032026.09**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சமரச சுத்த சன்மார்க்க நெறியை உலகிற்கு எடுத்துரைத்த அருட்பிரகாச வள்ளலார், கவிஞராக மட்டுமன்றி சிறந்த உரைநடை எழுத்தாளராகவும் விளங்கியவர். அவருடைய உரைநடை நூல்கள் சமய விளக்க நூல்களாக மட்டுமல்லாமல், மனிதநேயம், உயிரிரக்கம், சமத்துவம், ஒழுக்கநெறி, சமூகச் சீர்திருத்தம் ஆகியவற்றை இலக்கிய நயத்துடன் எடுத்துரைக்கும் படைப்புகளாகத் திகழ்கின்றன. மொழிநடை, கருத்தமைப்பு, எடுத்துரைப்புத் திறன், சமூகப் பொறுப்பு, ஆன்மநேயச் சிந்தனை, ஜீவகாருண்யக் கோட்பாடு, இலக்கிய உத்திகள் ஆகிய கூறுகள் பற்றி எடுத்துரைக்கிறது. மேலும், வள்ளலாரின் உரைநடை மனிதநேயம், சமய நல்லிணக்கம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, உலக சகோதரத்துவம் போன்ற சமகாலப் பிரச்சினைகளுக்கும் வழிகாட்டும் ஆற்றல் பெற்றுள்ளது என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**கருச்சொற்கள்**

வள்ளலார், உரைநடை, படைப்பிலக்கியம், ஜீவகாருண்யம், மனுமுறை கண்ட வாசகம், மனிதநேயம், சன்மார்க்கம், மொழிநடை, சமயச் சீர்திருத்தம்.

**முன்னுரை**

இலக்கிய உலகம் ஒவ்வொரு காலகட்டத்திலும் தனித்துவமான சிந்தனையாளர்களை உருவாக்கியுள்ளது என்பது யாவரும் அறிந்ததே. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்த மனிதகுலத்தின் ஆன்மநேய முன்னேற்றத்தை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த அருட்பிரகாச வள்ளலார், தமிழ் இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்க ஆளுமையாகத் திகழ்கிறார். அவரது பங்களிப்பு கவிதை இலக்கியத்தோடு மட்டுப்படாமல், உரைநடை இலக்கியத்திலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வள்ளலாரின் உரைநடை நூல்கள் சமயக் கருத்துக்களை விளக்கும் நூல்களாக மட்டும் அமையவில்லை. அவை மனித வாழ்வின் நோக்கம், ஒழுக்கம், உயிரிரக்கம், இறையுணர்வு, சமத்துவம், சமூகப் பொறுப்பு ஆகியவற்றை தெளிவான மொழியிலும் ஆழமான சிந்தனையிலும் எடுத்துரைக்கும் படைப்புகளாக அமைந்துள்ளன. அவரது உரைநடையில் காணப்படும் எளிமையும் ஆழமும், கருத்து விளக்கத்தின் தெளிவும், வாசகரின் உள்ளத்தைத் தொடும் மொழிநயமும், அவரைத் தனித்துவமான உரைநடைப் படைப்பாளராக உயர்த்துகின்றன. இலக்கியம் என்பது அழகியலின் வெளிப்பாடு மட்டுமன்று; அது சமூக மாற்றத்திற்கான கருவியும் ஆகும். இந்நோக்கில் வள்ளலாரின் உரைநடை நூல்கள் சமூகச் சீர்திருத்த இலக்கியத்தின் முன்னோடி படைப்புகளாகக் கருதப்படுகின்றன. சாதி, சமய வேறுபாடு, உயிர்க்கொலை, மூடநம்பிக்கை போன்றவற்றை எதிர்த்து அவர் முன்வைத்த கருத்துகள் இன்றளவும் பொருத்தமுடையவையாக உள்ளன.

எனவே, வள்ளலாரின் உரைநடை நூல்களில் வெளிப்படும் படைப்பிலக்கிய ஆளுமையை இலக்கியக் கண்ணோட்டத்தில் ஆராய்வது இன்றைய ஆய்வுலகிற்கும் தமிழ் இலக்கியத் திறனாய்விற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பாக அமையும் என்பது திண்ணம்.

**வள்ளலாரின் உரைநடை நூல்கள் – ஓர் அறிமுகம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் உரைநடை இலக்கியத்தின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க திருப்புமுனையை ஏற்படுத்தியவர்களில் இராமலிங்க அடிகளார் முக்கியமான இடத்தைப் பெறுகிறார். தமிழில் ஆழமான ஆன்மிக மற்றும் சமூகக் கருத்துகளை மக்களிடம் கொண்டு சென்றவர் வள்ளலார். இதனையே **"ஒரு சீவனைக்கொன்று மற்றொரு சீவனுக்குப் பசியாற்றுவித்தல் கடவுளருளுக்குச் சம்மதமுமல்ல, சீவகாருணிய ஒழுக்கமுமல்ல என்று சத்தியமாக அறியவேண்டும்" (தவத்திரு ஊரன் அடிகள், வள்ளலாரின் உரைநடை நூல்கள், ப. 24)** என்று வலியுறுத்தியுள்ளார். அவரின் உரைநடைப் படைப்புகள் சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டவை. மனிதனை இறையுணர்விற்கு வழிநடத்துவதோடு, மனித சமுதாயத்தில் நிலவிய சாதி, சமய வேறுபாடு, உயிர்ப்பலி, மூடநம்பிக்கை, பசிப்பிணி போன்ற சமூகச் சிக்கல்களுக்கும் தீர்வு காணும் நோக்கத்துடன் அவை எழுதப்பட்டுள்ளன. பசிப்பிணி பற்றி வள்ளலார் **"பசியினால் துன்பப்படுகின்றவர்கள் ஆகாரத்தைக் கண்ட காலத்தில் அடைகின்ற சந்தோஷமும் தாய், பிதா, பெண்டு, பிள்ளை, காணி, பூமி, பொன், மணி முதலானவைகளைக் கண்ட காலத்திலும் அடையார்களாயின், ஆகாரம் உண்ட காலத்தில் உண்டாகும் சந்தோஷம் எப்படிப்பட்டதாக இருக்கும்? ஆகலால் இந்த ஆகாரத்தின் சொரூப ரூப சுபாவங்களம் கடவுளருளின் ஏகதேச சொரூப ரூப சுபாவங்காளாகவே அறியவேண்டும்" (தவத்திரு ஊரன் அடிகள், வள்ளலாரின் உரைநடை நூல்கள், ப. 29)** இதனால் அவரது உரைநடை நூல்கள் ஆன்மிக இலக்கியமாக மட்டுமல்லாமல், சமூகச் சீர்திருத்த இலக்கியமாகவும் மதிக்கப்படுகின்றன.

மனுமுறை கண்ட வாசகம் என்னும் நூலில் நீதிநெறி, அரசியல் அறம், ஆட்சியாளரின் பொறுப்பு, குடிமக்களின் ஒழுக்கம் ஆகியவை எளிய உரைநடையில் விளக்கப்படுகின்றன. திருக்குறள் போன்ற அறநூல்களின் சிந்தனை மரபைத் தொடர்ந்து, சமூக வாழ்வில் அறம் நிலைநிறுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வள்ளலார் வலியுறுத்துகிறார். ஜீவகாருண்ய ஒழுக்கம் வள்ளலாரின் உரைநடைப் படைப்புகளில் தலைசிறந்த ஒன்றாகும். உயிரிரக்கம் இறைவழிபாட்டைக் காட்டிலும் உயர்ந்தது என்ற அவரது நிலைப்பாடு இந்நூலில் தெளிவாக வெளிப்படுகிறது. பசியால் வாடும் உயிருக்கு உணவளிப்பதே உண்மையான வழிபாடு என்ற கருத்தை, **"பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தவராயினும் செய்கையாராயினும் அவர்கள் தேச ஒழுக்கம், சமய ஒழுக்கம், சாதி ஒழுக்கம், செய்கை ஒழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம்" (தவத்திரு ஊரன் அடிகள்,**

**வள்ளலாரின் உரைநடை நூல்கள், ப. 32)** என்ற கருத்து வள்ளலாரின் மனிதநேயப் பார்வையை இலக்கிய வடிவில் வெளிப்படுத்துகிறது.

வள்ளலாரின் உரைநடை நூல்களின் தனிச்சிறப்பு அவற்றின் மொழி அமைப்பிலேயே வெளிப்படுகிறது. அக்காலத்தில் வடமொழிச் சொற்கள் நிறைந்த உரைநடை வழக்கில் இருந்த போதிலும், வள்ளலார் பொதுமக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் தமிழைத் தேர்ந்தெடுத்தார். கருத்தின் ஆழம் குறையாமல், மொழியின் எளிமை குன்றாமல் எழுதும் திறமை அவரது படைப்பாளுமையை வெளிப்படுத்துகிறது.

மேலும், அவரது உரைநடை நூல்களில் தர்க்கமும் உணர்ச்சியும் சமநிலையில் அமைகின்றன. ஒரு கருத்தை முன்வைக்கும் போது முதலில் அதன் காரணத்தை விளக்கி, பின்னர் எடுத்துக்காட்டுகள் மூலம் உறுதிப்படுத்தி, இறுதியில் நடைமுறை வாழ்க்கையோடு இணைத்துக் கூறும் முறை காணப்படுகிறது. இதனால் வாசகர் கருத்தை அறிவால் மட்டுமன்றி அனுபவத்தாலும் உணர முடிகிறது.

இதனடிப்படையில் வள்ளலாரின் உரைநடை நூல்கள் தமிழ் உரைநடை வளர்ச்சியில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியதோடு, இலக்கியம் சமூக மாற்றத்திற்கான கருவியாக அமைய முடியும் என்பதற்கும் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன என்பது புலனாகிறது.

**உரைநடையில் மொழிநடை**

ஒரு படைப்பாளரின் ஆளுமையை வெளிப்படுத்தும் முக்கியக் கூறுகளில் மொழிநடை முதன்மையானது. கருத்தை வாசகரிடம் தெளிவாகவும் தாக்கமிக்க வகையிலும் கொண்டு சேர்க்கும் கருவி மொழியாகும். வள்ளலாரின் உரைநடை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. அவரது மொழிநடையில் எளிமை, தெளிவு, இனிமை, கருத்துச் செறிவு மற்றும் இலக்கிய நயம் ஆகியவை இயல்பாக ஒன்றிணைந்துள்ளன.

வள்ளலார் பொதுமக்களே தமது சிந்தனையின் இலக்கு என்பதை உணர்ந்திருந்தார். எனவே, பண்டிதர்களுக்கு மட்டுமே புரியும் சிக்கலான மொழியை அவர் தவிர்த்தார். பொதுமக்களின் பேச்சு வழக்கிற்கு நெருக்கமான தமிழில் ஆழமான தத்துவங்களை எடுத்துரைத்தார். இதனால் அவரது உரைநடை காலத்தைக் கடந்து இன்றும் வாசிக்க எளிதானதாக உள்ளது.

வள்ளலாரின் உரைநடையில் வினாவிடை அமைப்பும் குறிப்பிடத்தக்க உத்தியாகும். வாசகரின் மனதில் எழக்கூடிய ஐயங்களை முன்னரே உணர்ந்து, அவற்றிற்கு உரையிலேயே விடையளிக்கும் நடை காணப்படுகிறது. அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள், இயற்கை நிகழ்ச்சிகள், மனித உறவுகள், உணவு, ஒளி, பசி, தாகம் போன்ற அனைவருக்கும் பரிச்சயமான அனுபவங்களை எடுத்துக்காட்டாகக் கொண்டு ஆழமான ஆன்மிக உண்மைகளை விளக்குகிறார். இதனையே **“இந்தத் தேகத்தில் ஆன்மாவும் அறிவுக்கறி வாயிருக்கிற கடவுள் விளக்கமுந் தவிர, கரணம் இந்திரியம் முதலிய மற்றத் தத்துவங்களெல்லாம் மூடமாகிய கருவிகளேயல்லது அறிவாகிய ஆன்மாக்களல்ல. ஆகலில் சுக துக்கங்களை அறிவாகிய ஆன்மாக்கள் அனுபவிக்குமேயல்லது மூடமாகிய தத்துவங்கள் அனுபவிக்க அறியா.”**

**(தவத்திரு ஊரன் அடிகள், வள்ளலாரின் உரைநடை நூல்கள், ப. 50)** உயிர்களின் துன்பத்தை விவரிக்கும் இடங்களில் அவரது மொழி கருணை உணர்வால் நிரம்பியதாக அமைகிறது. அத்தகைய உணர்ச்சி வெறும் இலக்கிய அழகுக்காக அல்லாமல் வாசகரின் மனத்தில் இரக்க உணர்வைத் தூண்டி சமூகப் பொறுப்பை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இதுவே அவரது படைப்பிலக்கிய ஆளுமையின் முக்கிய அடையாளமாகும்.

எளிமை, செறிவு, இனிமை, மனிதநேயம் மற்றும் தத்துவ ஆழம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த அவரது மொழிநடை, தமிழ் உரைநடை வரலாற்றில் தனித்துவமான படைப்பிலக்கிய ஆளுமைக்கு மேலும் எடுத்துக்காட்டாகும்.

**சிந்தனைப் படைப்பாளுமை**

ஒரு இலக்கியப் படைப்பாளரின் சிறப்பு, அவர் முன்வைக்கும் கருத்துகளின் புதுமை, அவற்றை வெளிப்படுத்தும் முறை, சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. இவ்வகையில் வள்ளலார், தமது உரைநடை நூல்களின் வழியாகத் தமிழ்ச் சிந்தனை மரபில் தனித்துவமான படைப்பாளராக விளங்குகிறார். அவரது சிந்தனைகள் வெறும் சமயக் கோட்பாடுகளாக இல்லாமல், மனித வாழ்வின் முழுமையான முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டவை. அதனால் அவரது உரைநடைப் படைப்புகள் தத்துவ நூல்களாக மட்டுமன்றி சமூக மாற்றத்திற்கான அறிவுசார் இலக்கியங்களாகவும் கருதப்படுகின்றன.

வள்ளலாரின் சிந்தனை உலகின் மையத்தில் அருட்பெருஞ்சோதி என்னும் இறையுணர்வு விளங்குகிறது. ஆனால், அந்த இறையுணர்வு உலக வாழ்விலிருந்து விலகிய ஆன்மிக அனுபவமாக மட்டும் இல்லாமல், மனிதன் பிற உயிர்களிடம் காட்டும் அன்பு மற்றும் இரக்கத்தின் வழியே அடைய வேண்டிய அனுபவமாக அவர் விளக்குகிறார். **"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்."** மனிதர்கள் மட்டுமல்ல, தாவரங்களின் துயரையும் தன்னுடைய துயரமாக உணர்ந்த கருணைநெறியை வெளிப்படுத்துகிறது. இதுவே அவரது சிந்தனையைப் பிற சமய அறிஞர்களிடமிருந்து வேறுபடுத்துகிறது. இறைவனை அடையும் பாதை, உயிர்களை நேசிக்கும் பாதையேயாகும் என்பதனை **“நம்மிடத்து நம்பிக்கையும் பேரன்பும் வைத்து மனுநீதி தவறாது அரசாட்சி செய்கின்ற மனுச் சோழனே! நீ நடத்துகின்ற நீதியின் பெருமையை உலகத்தவர் செவ்வையாகத் தெரிந்துகொள்ளும்படி நாமே இவ்வாறு சோதித்தோம். இனி ஒன்றும் அஞ்ச வேண்டாம் என்று திருவாய் மலர்ந்தருளி, இறந்துகிடக்கின்ற பசுங்கன்றும் கலா வல்லப னென்னும் மந்திரியும் வீதிவிடங்கனெனும் இராஜகுமாரனும் உயிர்பெற்று எழுந்திருக்கும்படி அருளினார்.” (தவத்திரு ஊரன் அடிகள், வள்ளலாரின் உரைநடை நூல்கள், ப. 206)** என்ற புதிய விளக்கத்தை அவர் உரைநடை நூல்களில் தொடர்ந்து வலியுறுத்துகிறார் என்பது தெளிவாகிறது.

பசியால் வாடும் உயிருக்கு உணவளிப்பது, துன்புறும் உயிரைக் காப்பது, எந்த உயிருக்கும் துன்பம் விளைவிக்காதிருப்பது ஆகியவற்றை அவர் உயர்ந்த அறமாகக்

**DOI: https://doi.org/10.63300/tm12032026.09**

கருதுகிறார். இக்கருத்து வெறும் அறவுரையாக மட்டுமல்லாமல், **“உள்ளபடி பசியால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங் கொடுக்க நினைத்தபோது, நினைத்த புண்ணியரது மனம் வேறு பற்றுக்களை விட்டுச் சுத்தக் காரணமாகி நினைத்த படியால், அந்தப் புண்ணியர்களை யோகிகளென்றே உண்மையாக அறியவேண்டும். ஆகாரங் கொடுக்க நினைத்தபடி உபசரித்துக் கொடுக்கும்போது, அவருண்ணுவது தாமுண்ணுவதாக அறிந்து களிக்கின்றபடியால், ஞானிகளென்றே உண்மையாக அறியவேண்டும்.” (தவத்திரு ஊரன் அடிகள், வள்ளலாரின் உரைநடை நூல்கள், பக். 37,38)** வாழ்வியல் தத்துவமாக அவரது உரைநடை முழுவதும் பரவியுள்ளது என்பதை அறியமுடிகிறது. மனிதனின் ஆன்மிக உயர்வும் சமூகப் பொறுப்பும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல; மாறாக, ஒன்றுக்கொன்று துணைபுரிபவை என்பதை அவர் வலியுறுத்துகிறார்.

மேலும், வள்ளலார் தமது சிந்தனைகளை நிலையான கோட்பாடுகளாக மட்டுமே முன்வைக்காமல், அவற்றை வாழ்வில் செயல்படுத்த வேண்டிய நெறிமுறைகளாக விளக்குகிறார். இதன் காரணமாக அவரது உரைநடை நூல்கள் இன்றும் தனிமனித ஒழுக்கம், சமூக நீதி, உலக அமைதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற துறைகளில் புதிய வாசிப்புகளுக்கு வழிவகுக்கின்றன.

**சமயச் சீர்திருத்தக் கருத்துகளில் இலக்கியத் தாக்கம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ்ச் சமூகத்தில் சமயத்தின் பெயரால் பல்வேறு மூடநம்பிக்கைகள், சாதி வேறுபாடுகள், உயிர்ப்பலி, வெளிப்புறச் சடங்குகள் மற்றும் சமயப் பாகுபாடுகள் வலுவாக நிலவின. இத்தகைய சூழலில், வள்ளலார் தமது உரைநடை நூல்களின் வழியாக சமயத்தின் உண்மையான நோக்கம் மனிதநேயம், அன்பு, இரக்கம் மற்றும் இறையுணர்வு என்பதைக் கூறி சீர்திருத்தக் கருத்துகளை முன்வைத்தார்.

வள்ளலாரின் சமயச் சீர்திருத்தக் கருத்துகளில் முதன்மையானது சமரச சுத்த சன்மார்க்கம் ஆகும். எல்லாச் சமயங்களிலும் காணப்படும் உயரிய அறக்கருத்துகளை ஏற்றுக்கொண்டு, மனித ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட வாழ்வியலை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். அவர் கடுமையாக எதிர்த்தவற்றுள் உயிர்ப்பலி குறிப்பிடத்தக்கது. இறைவனுக்காக உயிரைக் கொல்வது அறமன்று; உயிரைக் காப்பதே இறைத் தொண்டு என்ற கருத்தை அவர் வலியுறுத்துகிறார். இந்த அணுகுமுறை அக்காலச் சமய மரபுகளுக்கு மாற்றான புதிய சிந்தனையை உருவாக்கியது. உயிரினங்களின் துன்பத்தை உணர்ந்து வாழ்வதே உண்மையான ஆன்மிகப் பண்பு என அவர் விளக்குகிறார்.

சாதி வேறுபாட்டிற்கு எதிரான நிலைப்பாடு வள்ளலாரின் சமயச் சீர்திருத்தக் கொள்கையின் மற்றொரு முக்கிய அம்சமாகும். பிறப்பின் அடிப்படையில் மனிதனை உயர்வு–தாழ்வு எனப் பிரிப்பது அறமன்று; அனைவரும் அருட்பெருஞ்சோதியின் பிள்ளைகளே என்ற

எண்ணம் அவரது எழுத்துக்களில் வலியுறுத்தப்படுகிறது. இதன் மூலம் சமத்துவம் ஆன்மிகக் கோட்பாடாக மட்டுமன்றி சமூக நீதிக்கான அடிப்படையாகவும் அமைகிறது.

வெளிப்புறச் சடங்குகளைக் காட்டிலும் உள்ளத் தூய்மைக்கு வள்ளலார் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார். இறைவனை அடைய பெரும் சடங்குகள், ஆடம்பர வழிபாடுகள் தேவையில்லை என்பதனை **“புண்ணியமென்பது சீவகாருணியமொன்றே என்றும், பாவமென்பது சீவகாருணியமில்லாமையொன்றே என்றும் அறியவேண்டும். அன்றி, சீவகாருணிய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள் விளக்கமென்றும், அதனால் வரும் இன்பமே கடவுள் இன்பமென்றும்” (தவத்திரு ஊரன் அடிகள், வள்ளலாரின் உரைநடை நூல்கள், ப. 45)** வள்ளலார் வலியுறுத்துகிறார். இதனையே வள்ளுவரும்

**“அறவினையா தெனின் கொல்லாமை; கோறல்**
**பிறவினை எல்லாம் தரும்.” (குறள் 321)**

அறத்தின் முதன்மை உயிரைக் கொல்லாமையே; கொலை பிற தீவினைகளுக்கெல்லாம் காரணமாகும் என்று வலியுறுத்துகிறார். அன்பும் இரக்கமும் நிறைந்த மனமே உயர்ந்த ஆலயம் என்ற கருத்து அவரது உரைநடையில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. இதனால் சமயம் வெளிப்புற நிகழ்விலிருந்து அகநிலை அனுபவமாக மாற்றப்படுகிறது.

இலக்கியக் கண்ணோட்டத்தில் நோக்கும்போது, வள்ளலார் தமது சீர்திருத்தக் கருத்துகளை கடுமையான தாக்குதல் மொழியில் முன்வைக்கவில்லை. மாறாக, தர்க்கம், எடுத்துக்காட்டுகள், அறவுரைகள் மற்றும் மனித அனுபவங்களை இணைத்துச் சொல்கிறார். இதனால் வாசகரிடம் எதிர்ப்பை உருவாக்காமல், சிந்தனையை உருவாக்கும் இலக்கிய உத்தி வெளிப்படுகிறது. இதுவே அவரது உரைநடைப் படைப்புகளின் நிலையான தாக்கத்திற்குக் காரணமாகும். சமய நல்லிணக்கம், மனித உரிமைகள், மதச்சார்பற்ற அணுகுமுறை, உயிரின நலன் போன்ற இன்றைய உலகளாவிய சிந்தனைகளுடனும் அவை நெருங்கிய தொடர்புடையவையாகவும் திகழ்கிறது.

இதனால், வள்ளலாரின் சமயச் சீர்திருத்தக் கருத்துகள் இலக்கிய அழகியல், பகுத்தறிவு, மனிதநேயம் மற்றும் ஆன்மிக உணர்வு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாக அமைந்துள்ளன என்பது தெளிவாகிறது.

**மனிதநேய ஒருமைப்பாட்டில் ஜீவகாருண்யம்**

வள்ளலாரின் உரைநடை நூல்களில் மிக ஆழமாக வெளிப்படும் மையச் சிந்தனை மனிதநேய ஒருமைப்பாட்டில் ஜீவகாருண்யம் ஆகும். அவரது இலக்கியப் படைப்பாளுமையைப் புரிந்துகொள்வதற்கு இவ்விரு கருத்துகளும் அடிப்படையாக அமைகின்றன. மனித வாழ்வின் உயர்ந்த இலட்சியம் இறையுணர்வை அடைவது மட்டுமல்ல; பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாக உணர்ந்து அவர்களுக்காக வாழ்வதே உண்மையான ஆன்மிக வாழ்க்கை என வள்ளலார் வலியுறுத்துகிறார். இதனை **“பிற உயிர்களிடத்துப் பசி கொலை முதலியவற்றுள் எதனாற் காருணியந் தோன்றியதோ**

**அதனால் அவ்வுயிர்கள் வருந்தாதபடி அதை நீக்குதற்கு முயல்விப்பது அதன் வல்லபமென்றறிய வேண்டும்" (தவத்திரு ஊரன் அடிகள், வள்ளலாரின் உரைநடை நூல்கள், ப. 48)** இதனால் அவரது உரைநடை நூல்கள் அறநெறி நூல்களாக மட்டுமல்லாமல், உலக மனிதநேய இலக்கியத்தின் சிறந்த எடுத்துக்காட்டுகளாகவும் திகழ்கின்றன.

ஜீவகாருண்ய ஒழுக்கம் எனும் அவரது உரைநடையில் நூலில், பசியால் வாடும் உயிருக்கு உணவளிப்பது எல்லா அறங்களிலும் உயர்ந்தது என்று வள்ளலார் கூறுகிறார். பசியை அவர் உடல் வேதனையாக மட்டும் கருதவில்லை; அது மனிதநேயத்தைச் சோதிக்கும் ஒழுக்கச் சிக்கலாகக் கருதுகிறார். ஒருவர் பசியுடன் இருக்கும்போது, அவருக்கு உணவளிக்காமல் செய்யப்படும் வழிபாடு முழுமையான இறைவழிபாடாக அமையாது என்ற கருத்து, அவரது மனிதநேயச் சிந்தனையின் உச்சநிலையை வெளிப்படுத்துகிறது என்பதனை **"பசித்தவர்களுக்கு பசியாற்றுவித்து இன்பத்தை உண்டு பண்ணுகின்ற சீவகாருணிய ஒழுக்கமாகிய மேலான விரதமானது தேவர்கள், மனிதர்கள், பிரமசாரிகள், சமுசாரிகள், தவசிகள், சந்நியாசிகள், ஆண்சாதியர், பெண்சாதியர், வார்த்திபர், வாலிபர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் முதலிய யாவராலும் அவசியம் செய்யத்தக்கதென்பது கடவுளாணை யென்றறியவேண்டும்" (தவத்திரு ஊரன் அடிகள், வள்ளலாரின் உரைநடை நூல்கள், ப. 37)** என்று வள்ளலார் வலியுறுத்துகிறார்.

ஜீவகாருண்யம் தொடர்பாக வள்ளலார் வலியுறுத்தும் மற்றொரு கருத்து கொல்லாமை ஆகும். எந்த உயிருக்கும் தேவையற்ற துன்பம் ஏற்படுத்தக் கூடாது என்ற அவரது நிலைப்பாடு, **"எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி இரங்குதல் வேண்டும்."** இன்றைய உயிரின நலன் (Animal Welfare), சுற்றுச்சூழல் அறம் (Environmental Ethics), உயிரியல் ஒழுக்கம் (Bioethics) போன்ற நவீன சிந்தனைகளுடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. இவ்வகையில், அவரது உரைநடை நூல்கள் தமது காலத்தைத் தாண்டிய சிந்தனைகளை முன்வைத்துள்ளன.

எனவே, மனிதநேய ஒருமைப்பாட்டில் ஜீவகாருண்யம் என்பது உரைநடை நூல்களின் மையக் கருத்துகளாக மட்டுமல்லாது அவரது படைப்பிலக்கிய ஆளுமையை அடையாளப்படுத்தும் உயிரோட்டமிக்க சிந்தனைகளாகவும் திகழ்கின்றன. இவை இன்றைய உலகிலும் மனித ஒற்றுமை, சமூக நீதி, உயிரின நலன், உலக அமைதி போன்ற உயரிய இலட்சியங்களுக்கு வழிகாட்டும் சிந்தனைகளாக விளங்குகின்றன.

**உரைநடையில் கையாண்ட உத்தி முறைகள்**

வள்ளலாரின் உரைநடை நூல்களின் இலக்கியச் சிறப்பை மதிப்பிடும்போது, அவர் கையாண்டுள்ள உரைநடை உத்திகளும் மொழிநயமும் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டும். கருத்துகளை வாசகரிடம் கொண்டு சேர்ப்பதில் அவர் பயன்படுத்திய நடைமுறைகள், அவரது படைப்பாளுமையை வெளிப்படுத்தும் முக்கியக் கூறுகளாக அமைகின்றன. எளிய சொற்களில் ஆழமான சிந்தனைகளை எடுத்துரைக்கும் திறன், உரையாடல் முறை, எடுத்துக்காட்டுகள்,

உவமைகள், உணர்ச்சிமிக்க மொழி ஆகியவை அவரது உரைநடைக்கு தனித்துவமான இலக்கியச் செழுமையை அளிக்கின்றன.

வள்ளலாரின் உரைநடையின் முதன்மை உத்தி எளிமை ஆகும். கருத்தை அலங்காரச் சொற்களால் மறைக்காமல், அனைவரும் புரிந்துகொள்ளும் தெளிவான தமிழில் வெளிப்படுத்துகிறார். இந்த எளிமை இலக்கியத் தரத்தைக் குறைக்காமல், மாறாக கருத்தின் தாக்கத்தை அதிகரிக்கிறது. ஆழமான தத்துவங்களைக்கூட பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துரைப்பது அவரது படைப்பாற்றலின் சிறப்பாகும். இதனையே **“இந்தப் பசுவானது குள்ளனைக் கொண்டு ஆழம்பார்க்க வந்தது போலவும், பேயைத் தெய்வமென்று பிள்ளைவரங் கேட்க வந்தது போலவும், கொல்லையாள் காட்டியைக் கூலி கேட்க வந்தது போலவும், விழலினிடத்து நிழலுக்கு வந்தது போலவும்” (தவத்திரு ஊரன் அடிகள், வள்ளலாரின் உரைநடை நூல்கள், ப. 176)** என்ற எளிய நடையில் விளக்கியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

மீளுரைத்தல் (Repetition) என்னும் உத்தியை வள்ளலார் திறமையாகப் பயன்படுத்துகிறார். மனிதநேயம், ஜீவகாருண்யம், அருள், அன்பு, இரக்கம், கருணை, ஒழுக்கம் போன்ற மையக் கருத்துகள் நூலின் பல இடங்களில் வெவ்வேறு சூழல்களில் மீண்டும் இடம்பெறுகின்றன. இதனையே திருமூலரும்

**“ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகுங்கதி இல்லை நும் சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினே.” (திருமந்திரம், பாடல் 2104)**

உலகில் உள்ள அனைவரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள்; இறைவனும் ஒருவனே. ஆகையால் எல்லா உயிர்களிடமும் அன்பும் சமத்துவமும் காட்ட வேண்டும். வள்ளலார் கருத்தின் முக்கியத்துவத்தை வாசகரின் மனதில் ஆழமாகப் பதியச் செய்யும் இலக்கிய உத்தியாக இது அமைகிறது எனலாம்.

வினா–விடை முறை அவரது உரைநடையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. வாசகர் எழுப்பக்கூடிய சந்தேகங்களை முன்னரே உணர்ந்து, அவற்றிற்குரிய விளக்கங்களை உரையிலேயே வழங்குகிறார். இதனால் உரை ஒருதலைப்பட்சமான போதனையாக இல்லாமல், சிந்தனையைத் தூண்டும் உரையாடலாக அமைகிறது. இத்தகைய நடை வாசகரின் அறிவையும் ஈடுபாட்டையும் வளர்க்கிறது என்பதனை **“நன்மை தீமை என்பவை யாவை? நன்மை தீமை யென்பவை புண்ணிய பாவம். புண்ணிய மென்பது ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும், பின் சுகமாயும் விளங்கும். பாவமென்பது ஆரம்பத்தில் சுகமாயும், பின் துக்கமாயும் இருக்கும்” (தவத்திரு ஊரன் அடிகள், வள்ளலாரின் உரைநடை நூல்கள், ப. 390)** அறியமுடிகிறது.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.09**

வள்ளலார் அன்றாட வாழ்க்கையில் காணப்படும் நிகழ்வுகளை எடுத்துக்காட்டுகளாக பயன்படுத்துவதிலும் சிறந்தவர். பசி, தாகம், ஒளி, இருள், தாய்–குழந்தை உறவு, இயற்கை நிகழ்வுகள் போன்ற அனைவருக்கும் பரிச்சயமான அனுபவங்களின் வழியே தத்துவக் கருத்துகளை விளக்குகிறார். இவ்வகை எடுத்துக்காட்டுகள் அவரது உரைநடைக்கு உயிரோட்டத்தையும் நம்பகத்தன்மையையும் அளிக்கின்றன. எனவே, வள்ளலார் கையாண்ட உரைநடை உத்திகளும் நயமும் அவரது படைப்பிலக்கிய ஆளுமையின் இன்றியமையாத கூறுகளாகும். மொழியின் எளிமை, கருத்தின் ஆழம், உணர்ச்சியின் செறிவு, பகுத்தறிவின் தெளிவு மற்றும் மனிதநேயப் பார்வை ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்த அவரது உரைநடை, தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை.

**வள்ளலாரின் உரைநடைப் பகுதியில் தற்காலச் சூழல்**

தற்காலச் சூழலியலில் சாதி, மதம், மொழி, இனம் ஆகியவற்றின் அடிப்படையில் உலகின் பல பகுதிகளில் இன்னமும் மோதல்கள் நிகழ்கின்றன. இத்தகைய சூழலில், சமரச சுத்த சன்மார்க்கம் முன்வைக்கும் மனித ஒற்றுமை, சமய நல்லிணக்கம் மற்றும் அன்பின் வழியிலான வாழ்வியல் கொள்கை மிகுந்த பொருத்தமுடையதாகும். மனிதனைப் பிரிக்கும் எல்லைகளை விட, மனிதனை ஒன்றிணைக்கும் பண்புகளே உயர்ந்தவை என்ற வள்ளலாரின் சிந்தனை, சமகால சமூக ஒற்றுமைக்கான உறுதியான அறக்கருத்தாக விளங்குகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் உயிரின நலன் தொடர்பான உலகளாவிய விழிப்புணர்வும் வள்ளலாரின் சிந்தனைகளோடு இணைகிறது. அனைத்து உயிர்களும் சமமான மதிப்புடையவை என்ற அவரது பார்வை, இன்றைய சுற்றுச்சூழல் அறம், உயிரினப் பன்மை பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சி (Sustainable Development) போன்ற கருத்துகளுக்கு ஒத்திசைவாக அமைந்துள்ளது. உயிரைக் காக்கும் மனப்பான்மை இயற்கையையும் காக்கும் மனப்பான்மையாக வளர வேண்டும் என்பதைக் காலத்திற்கு முன்னரே அவர் உணர்த்தியுள்ளார் என்ற பாங்கு இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

**முடிவுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் வள்ளலார் உரைநடை இலக்கியத்திற்கு அளித்த பங்களிப்பு தனித்துவமானது. கவிஞர், ஞானி, சமயச் சீர்திருத்தவாதி என்ற அடையாளங்களோடு, சமூகப் பொறுப்புணர்வுமிக்க உரைநடைப் படைப்பாளராகவும் அவர் விளங்கியுள்ளார். அவரது உரைநடை நூல்கள் சமய விளக்க நூல்களாக மட்டும் இல்லாமல், மனித வாழ்வின் ஒழுக்க நெறி, சமூக நீதி, சமத்துவம், உயிர்நேயம் மற்றும் உலக சகோதரத்துவம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட படைப்பிலக்கியங்களாக அமைந்துள்ளன என்பது தெளிவாகிறது.

வள்ளலாரின் உரைநடை நூல்களில் மொழிநடை ஆளுமை, சிந்தனைப் படைப்பாளுமை, சமயச் சீர்திருத்தக் கருத்துகள், மனிதநேயம், ஜீவகாருண்யம் மற்றும் இலக்கிய உத்திகள் ஆகியவை ஒருங்கிணைந்த நிலையில் வெளிப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

கருத்தின் ஆழம், மொழியின் எளிமை, பகுத்தறிவின் தெளிவு, உணர்வின் செறிவு, இலக்கிய நயம் ஆகிய அனைத்தையும் இணைத்துச் சிறந்த உரைநடை இலக்கியங்களை வள்ளலார் படைத்துள்ளார் என்பது புலனாகிறது.

வள்ளலாரின் உரைநடை நூல்கள் தொகுப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு, வள்ளலாரின் உரைநடை நூல்கள் தமிழ் உரைநடை வரலாற்றில் புதிய பரிணாமத்தை உருவாக்கியதையும், சமூக மாற்றத்திற்கான இலக்கியத்தின் ஆற்றலை எடுத்துக்காட்டியதையும் உறுதிப்படுத்துகிறது. உதாரணமாக, ஜீவகாருண்யத்தை மனித வாழ்வின் உச்ச அறமாக நிலைநிறுத்திய அவரது சிந்தனை, இன்றைய உலகிற்கும் காலத்தால் அழியாத வழிகாட்டும் நெறியாக விளங்குகிறது. மேலும், வள்ளலாரின் உரைநடை நூல்களை வெறும் சமய இலக்கியமாகக் கருதாமல், தமிழ் இலக்கியம், சமூகச் சிந்தனை, மனிதநேயத் தத்துவம் மற்றும் படைப்பிலக்கிய வளர்ச்சி ஆகிய துறைகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய ஆய்வுக்குரிய இலக்கியச் செல்வமாக அணுகுவது அவசியமாகும். இத்தகைய ஆய்வுகள் எதிர்காலத்தில் வள்ளலாரின் உரைநடைப் படைப்புகளை புதிய திறனாய்வுக் கோணங்களில் அணுகுவதற்கும், தமிழ் ஆய்வுலகில் புதிய ஆய்வுப் பரிமாணங்களை உருவாக்குவதற்கும் அடிகளாரின் உரைநடை நூல்கள் நமக்கு துணை செய்கின்றன என்பது தெளிவாகிறது.

## துணைநூற்பட்டியல்

[1.] இராமலிங்க அடிகளார், தவத்திரு ஊரன் அடிகள் பதிப்பு, சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம் / திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம் மற்றும் இராமலிங்கர் பணிமன்றம். முதற்பதிப்பு 1978.

[2.] கு. சீநிவாசன், சுத்த சன்மார்க்க விளக்கம், இலக்கிய நிலையம், 30, ஆண்டார் தெரு, திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு 1966.

[3.] இராமலிங்க அடிகளார், திருவருட்பா, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிராட்வே, சென்னை – 1. பதிப்பு ஆண்டு 1867.

[4.] இராமலிங்க அடிகளார், மனுமுறை கண்ட வாசகம், வடலூர்: சமரச சுத்த சன்மார்க்க வெளியீடு. ஜீன் 1854.

[5.] சுப்பிரமணியன், ச. வே. தமிழ் இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. பதிப்பு 2007.

[6.] திருக்குறள், பரிமேலழகர் உரை, கழக வெளியீடு, சென்னை - 2002.

[7.] திருமூலர், திருமந்திரம் உரையுடன், கழக வெளியீடு, சென்னை - 2002.